# இசுலாமிய சிற்றிலக்கிய அமைப்பு

24

ப. பிரியதர்ஷினி & திரு. வீ. கோபிநாத்
உளவியல் துறை உதவிப் பேராசிரியர்,
பூ. சா. கோ. அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.
மின்னஞ்சல் :23mpy026@psgrkcw.ac.in, gobinath@psgrkcw.ac.in

**ஆய்வுச் சுருக்கம் :**

தமிழ் வளர்ச்சியில் பல சமயங்களின் இலக்கிய படைப்புகள் இடம்பெற்றுள்ளது. அதில் குறிப்பாக இசுலாமிய சமயத்தின் பங்களிப்பு ஏராளம். இசுலாமிய சமயத்தைச் சார்ந்த சிற்றிலக்கியங்களும் காப்பியங்களும் மலர்ந்து தமிழ் மொழிக்கு வாசனை சேர்த்துள்ளன. இசுலாமிய சிற்றிலக்கியம் இரண்டு வகைகளாக உள்ளது. இசுலாமிய புலவர்கள் தமிழ் இலக்கிய மரபு வழியிலும் புது வகை இலக்கிய வகையிலும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளனர். ஒவ்வொரு வகையிலும் அமைந்து உள்ள இலக்கிய கொள்கையும் அதற்கு சான்றான நூல்களையும் கூறுவதே இந்த ஆய்வு கட்டுரை.

**ஆய்வு நோக்கம்:** தமிழில் இசுலாமிய சிற்றிலக்கியங்களின் அமைப்பையும் அதன் கொள்கைகளையும் பற்றி பேசுவதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கம்.

**திரவுச்சொற்கள் :** புதுவகை இலக்கிய வகை - கிஸ்ஸா - நாமா - படைப்போர் - மசலா - முனாஜாத்து - பொதுவான இலக்கிய வகை - பிள்ளைத்தமிழ் - கோவை - ஏசல் - மாலை - குறம் - பூவடிச் சிந்து.

## முன்னுரை :

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"**

என்று மகாகவி பாரதியார் கண்ட கனவினை பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தமிழ்ப் புலவர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

தமிழ் இலக்கியங்களில், பண்டுதொட்ட பல்வேறு இனத்தையும் வெவ்வேறு சமயத்தையும் பற்றிய நூல்கள் மிகப்பல உள்ளது என்னும் கூற்றை யாராலும் மறுக்க இயலாது. உலகில் பரவியிருக்கும் பிரதானமான பல சமயக் கொள்கைகளை எடுத்துரைக்கும் ஒருசில மொழிகளுள் இனிய தமிழ் மொழியும் ஒன்று. இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மொழியில் இஸ்லாமிய மார்க்க அடிப்படையில் இலக்கியங்கள் பிறந்து வளர்ந்துள்ளது. இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் கிபி 1648 ஆம் ஆண்டிற்கும் கிபி 1894 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றின. இதில் பதினாறு பெருங்காப்பியங்களும் ஒன்பது சிறுகாப்பியங்களும் உள்ளன. இக்கட்டுரையில் சிற்றிலக்கியங்களை பற்றி காண்போம்.

**இசுலாமிய சிற்றிலக்கியங்கள் :**

கி.பி, 16-அம் நூற்றாண்டிற்கும் 19-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் "இருண்ட காலமாக" கருத்தப்பட்டது. நவாபுகளும், நாயக்கர்களும், மராத்தியர்களும் ஆட்சி செலுத்திய காலம் அது. பிறமொழியாளரின் செல்வாக்கு பெருகியிருந்த அக்காலத்தில், சிறந்த இலக்கியங்கள் அதிகளவில் தமிழில் தோன்றவில்லை.

தனி மனிதர் புகழ்பாடும் நூற்களும், சமயக் கண்டன நூற்களும், சிற்றின்பச் சுவை பயக்கும் நூற்களுமே நிறைந்த அளவில் வெளிவரத் தொடங்கின. திசைமாறிப் போய்க் கொண்டிருந்த தமிழ் இலக்கியப்போக்கினைக் கட்டுப்படுத்தித் தலைசிறந்த காப்பியங்களையும் ஞான நூற்களையும், சிற்றிலக்கியங்களையும், புதிய இலக்கிய வகைகளையும், ஏராளமாக எழுதித் தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தவர்கள் இசுலாமியத் தமிழ்ப் புலவர்களே எனலாம். அரபு, பாரசீகம் போன்ற மொழிகளில் புகழ்பெற்ற இலக்கிய வகைகள் தமிழ் வடிவம் பெற்றன. இஸ்லாமிய நெறிமுறைகளைப் பாமரர்களுக்கும் விளங்கும் வகையில் எளிய நடையில் விளக்குவது இதன் நோக்கமாகும்.

இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களை இருபெரும் பிரிவுகளாக நாம் பிரித்துக் கொள்ளலாம். அவையாவன:

1) இஸ்லாமியர் அறிமுகப்படுத்திய புதுவகைச் சிற்றிலக்கியங்கள்.

2) இஸ்லாமியர் வழங்கிய பொதுவான இற்றிலக்கியங்கள்.

**இசுலாமியர் அறிமுகப்படுத்திய புதுவகைச் சிற்றிலக்கியங்கள் :**

கிஸ்ஸா, நாமா, படைப்போர், மசலா, முனாஜாத்து போன்றவற்றை இஸ்லாமியர் அறிமுகப்படுத்திய புதுவகைச் சிற்றிலக்கியங்கள் எனலாம். இவை இஸ்லாமிய புலவர்கள் அறிமுகப்படுத்திய சிற்றிலக்கிய வகைகளாகும். இவற்றை "இஸ்லாமியத் தமிழிலக்கிய வடிவம்'" என்றே நாம் குறிப்பிடலாம். இவ்வகை இலக்கியங்களை இஸ்லாம் அல்லாத வேறு தமிழிலக்கியங்களில் நம்மால் காண முடியவில்லை.

"இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பிறமதக் கண்டனங்கள் அற்றவை; பிறரைத் தம்வயப்படுத்தும், சமயப் பிரச்சாரங்கள் இல்லாதவை" என்று ஈழத்துப் பேராசிரியர் வி.செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

- ***கிஸ்ஸா***

கதை சொல்லுதல் என்ற பொருளை உடைய 'கஸஸ்' என்ற அரபுச் சொல்லை வினையடியாகக் கொண்டது. "கிஸ்ஸா' என்னும் சொல் கதையென்ற பொருளை உடையது. அரபு நாட்டு மக்கள் தங்கள் ஒய்வுநேரங்களைக் கதை அல்லது கிஸ்ஸா கூறுவதில் கழித்தனர். இவற்றோடு இஸ்லாமியப் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு அக்கதைகள் காட்சியளித்தன. இதன் பயனாகத் தமிழிலும் கிஸ்ஸா நூற்கள் தோன்றின. 23 கிஸ்ஸாக்கள் தமிழில் உள்ளது.

மதாறு சாகிப் புலவரின் "யூசுப் நபி கிஸ்ஸாவும்", அப்துல் காதர் சாகிபு பாடிய "சைத்தூன் கிஸ்ஸா" வும் தமிழிலுள்ள கிஸ்ஸா இலக்கியங்களில் புகழ் பெற்றவை ஆகும்.

கிஸ்ஸா இலக்கியக் கொள்கை

1. இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சிகளையும், இஸ்லாமியக் கொள்கைகளையும் இஸ்லாமியப் போதனைகளையும் கதையாக எடுத்துரைக்கின்றன.

2. மணிமிடை பவளம்போல வரலாற்றினிடையே இஸ்லாமிய நல்லுரைகள் இடம்பெறுகின்றன.

3. கிஸ்ஸாக்களுக்கென்று தனி இலக்கிய வடிவம் இல்லை. செய்யுளாகவோ, உரைநடையாகவோ, அல்லது செய்யுள் உரைநடை இரண்டும் விரவியோ அமைந்துள்ளன.

4. பெரும்பாலான கிஸ்ஸாக்களில் பலவும் இஸ்லாமத்தைத் தழுவிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருப்பதால் இஸ்லாம் பரவிய வழிமுறைகளை அறியத் துணை புரிகின்றன.

5. இஸ்லாமிய மார்க்கப் பற்றினை வலியுறுத்துகின்றன.

(எ.கா) ஈசுபு நபி மீது மன்னன் அசீசுக்கு அன்பு அதிகரித்தது. அவரைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள முயன்றான். அவரது வரலாற்றை அக்கறையுடன் கேட்டறிந்தான். தன் வாழ்க்கை வரலாற்றை ஈசுபு விரித்துரைத்ததை,

**"விரும்பினார் முன்னங் கண்ணான்விட்டு**
**வெளியே புறப்பட்ட நாள்முதலாய்த்**
**திரும்பிவந்த நாள்வரை நடந்த**
**செய்தியாவையும் விளப்பினரே"**

என மதாறு சாஹிபுப் புலவர் ஈசுபு நபி கிஸ்ஸாவில் கூறுகிறார்.

- ***நாமா***

'நாமே' என்ற பாரசிகச் சொல்லே தமிழில் “நாமா" என மருவி வழங்குகின்றது. இச்சொல் கதை, வரலாறு, நூல் என்ற பல பொருள்களைத் தரும். செயற்கரிய செய்த செம்மல்களின் சிறந்த வரலாற்றைப் பாரசீக இலக்கிய அமைப்பைத் தழுவித் தமிழில், 'நாமா' என்ற பெயரில் புதுவகை இலக்கியப் பிரபந்தத்தை இஸ்லாமியப் புலவர்கள் பாடினர்.

தமிழில் செய்யது அகமது மரைக்காயர் புலவர் பாடியுள்ள “நூறு நாமா”, மதாறு சாசிப் புலவரின் “மிஃராஜ் நாமா”, அப்துல் காதர் சாஹிபின் “சக்காறத்து நாமா" ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

நாமா இலக்கியக் கொள்கை

1. வரலாற்றைக் கூறும் சிற்றிலக்கிய வகையே ‘நாமா’ எனப்படும்.

2. இம்மை இன்பங்களில் மூழ்கி, மறுமையை மறந்து வாழும் மனித சமுதாயத்துக்கு இறைநெறியை உணர்த்துகின்றன.

3. ‘தொங்கல்' எனப்படும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்திலேயே பெரும்பாலான நூற்கள் எழுதப்பட்டுள்ளன.

(எ.கா) செய்யிது அஹ்மது மரைக்காயர் படைத்த 'நூறு நாமா' வின் இறை வாழ்த்துப் பாடலில், காயும் பூவும் போல, பாலும் அதிலுள்ள ஆடையும் போல வல்ல அல்லாஹ் எங்கும் இரண்டறக் கலந்து நிறைந்துள்ள பான்மையை பின்வருமாறு கூறுகிறார்.

**“காயும் பூவும்போல் பாலிலாடை**
**கலந்த உவமைபோல் சற்றேனுமோ**
**ஈனுமணுகாமல் நிறைந்த சோதி**
**இறையான் தனைப்போற்றி செய்குவோம்”**

- ***படைப்போர்***

படை, போர் என்பன ஏறக்குறைய ஒருபொருட் சொற்கள், ஆங்கிலத்தில் வழங்கும் " war ballad " என்ற நூலினத்தின் இலக்கணங்கள் அனைத்தும் ஏறத்தாழ படைப் போரில் அமைந்திருக்கக் காணலாம்.

படைப்போர் இலக்கியக் கொள்கை

1. முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாதவருக்கும் இடையே நடைபெற்ற போர்களையே இந்நூற்கள் விளக்குகின்றன.

2. தீய சக்திகள் வீழ்ச்சியடை வதையும், தூயசக்திகள் வெற்றி பெறுவதையும் கருவாகக் கொண்டுள்ளன.

3. இஸ்லாமிய மரபிற்கும், கொள்கைகளுக்கும் பொருந்தாத உறுப்புக்களை விடுத்து, பரணியின் ஒரு பகுதியாகிய "போர் பாடியது என்பதை மட்டும் பாடு பொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

4. பெரும்பாலான படைப் போர்களில் தலைமைச் சிறப்பு, காப்பியத் தலைவருக்கு அப்பாற்பட்டு நபிகள் நாயகத்துக்கு வழங்கப்படுகின்றது.

5. மண், பெண் ஆதிக்க வெறியற்று, இஸ்லாமிய அறநெறிகளையும் கொள்கைகளையும் நிலை நாட்டுதற் பொருட்டு நடந்த போர்களையே இவை விவரிக்கின்றன.

6. அநீதியை அகற்றவும், தற்காப்பிற்கும் மட்டுமே நபிநாதர் படைகள் போர் செய்கின்றன.

7. எதிர்த் தலைவர்கள் பலரும் இஸ்லாத்தை இறுதியில் மனமுவந்து ஏற்கின்ற நிலை காணப்படுகின்றது.”

8. எதிர்த் தலைவர்களின் பெயர்களே பெரும்பாலான படைப்போர் இலக்கியங்களுக்கு நூற்பெயராகச் சூட்டப்படுகின்றது.

9.காப்பிய இலக்கணம் பொருந்த அமைந்த படைப் போர்கள் விருத்த யாப்பிலும், நாட்டுப்புற வீரக் கதைப் பாடல்களாக விளங்கும் படைப்போர்கள் கண்ணிகளாலும் பாடப்பட்டுள்ளன.

10. பெரும்பாலும் அதீதக்கற்பனைகளும், விரசங்களும் தவிர்க்கப்படுகின்றன.

(எ.கா) சக்கூன் படைப்போர் நூலில், சக்கூனரசனுடைய பெரும் பதியைக் கண்ட எண்ணிக்கையில் குறைந்த அசுகாபிமார்கள் அச்சமுற்று வியப்படைகின்றனர், இந்நிலையை

**“நாடிய சக்கூன் பதி நற்புரிசை கண்டனரே**
**புரிசைதனைக் கண்டு புலிகாணும் மானதைப்போல்**
**வரிசைநபி தோழரெல்லா மனதிற் பயந்திருந்தார்”**

என ஆசிரியர் சுட்டுகின்றார்.

- ***மசலா***

இஸ்லாமிய மார்க்கத் தொடர்பான கேள்விகளையும், மறுமொழிகளையும் கொண்ட ஒரு சிற்றிலக்கிய வகையே "மசலா" என்பதாகும். 'ஸுஆல்' என்ற அரபுச் சொல்லுக்குக் 'கேள்வி கேட்டல்' என்பது பொருள். மசலா என்னும் இச்சொல் கேள்வி புதிர், பிரச்சினை போன்ற பல பொருள்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது.

அதிசய புராணம் என்று வழங்கும் "ஆயிரம் மசலா" மதுரை வண்ணப் பரிமளப் புலவரால் பாடப் பட்டுள்ளது.

இஸ்லாமியத்தைப் பற்றி அறியாத யூதர் கேட்ட கேள்விகளுக்கு விடை பகிரும் வகையில் 'ஆயிரம் மசலா' அமைந்து உள்ளது.

மசலா இலக்கியக் கொள்கை

1. இஸ்லாமிய மார்க்கம் தொடர்பாக ஏற்படும் ஐயங்களுக்கு, வினாவிடை முறையில் இந்நூற்கள் விளக்கம் அளிக்கின்றன.

2. இஸ்லாமியத் திருமறையாகிய திருக்குர் ஆன், நபிகள் நாயகம் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஹதீதுகள் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு மார்க்க விளக்கங்கள் தரப்படுகின்றன.

3. மசலா நூற்களில் கற்பனைகளுக்கு இடமே இல்லை. உண்மை நிலையை விளக்கும் உயர்ந்த இலக்கிய வகையாக இவை உள்ளன.

4. லினாவிடை அமைப்பின் மூலம் நுட்பமான வினாக்களுக்கும் மிகத்தெளிவாக எளிய நடையில் விளக்கங்கள் தரப்படுவதால் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளை எவரும் எளிதில் அறிவதற்குத் துணைபுரிகின்றன.

(எ.கா) மதுவினை மாயை காரணமாக அருந்துவோர் மரணத்திற்குப் பின் மறுமை வாழ்வில் அடையும் இன்னலை நபிமொழி மூலமாக எடுத்துரைக்கின்றார் ஆசிரியர் வண்ணப்பரிமளப்புலவர்.

**"மதமுறு மதுவையுண்ட மாந்தர்கள் வயிற்றின் மீதே**
**கொதுகொது கொதெனக் காய்ந்து குமுறிய கனல் வெந்நீரைக்**
**கதக தகதென வார்க்கக் கனங்குட லீர லெல்லா**
**மொதுமொது மொதெனத்தள்ளி வீழ்ந்திடு முறண்டுதானே"**

(ஆயிரமசலா: 597)

- ***முனாஜாத்து***

ஆண்டவனையும் அவனது தலைசிறந்த அடியார்களையும் அருள் புரியுமாறு கேட்டுப் பாடப்பட்ட பாக்களே *முனாஜாத்து"என்று வழங்கலாயின, 'முனாஜாத்து' என்ற அரபுச்சொல், "இரகசியமாகச் சொல்லுதல்" என்று பொருள்படும்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராகிய செ. மு. செய்யது முகம்மது ஆலிம் என்பவர், "முனாஜாத்து

மாலிகை" என்ற நூலை இயற்றியுள்ளார். எண்ணிலடங்கா முனாஜாத்துப் பாக்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரிசையில் இடம் பெற்றுள்ளன.

முனாஜாத்து இலக்கியக் கொள்கை

1. ஆண்டவனையும், அவனது திருவருள் பெற்ற பெரியோர்களையும் போற்றிப்புகழ்ந்து வேண்டும் அருள்வேட்டல் நூற்களே முனாஜாத்துக்கள்.
2. முனாஜாத்துப் பாக்களின் இறுதியில், அம்முனாஜாத்தில் புகழப்பட்டவர் விளிக்கப்படுவர்.
3. இஸ்லாமியப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறியத் துணை புரிகின்றன.
4. பாமர மக்களுக்கு இஸ்லாமிய அறிவை எளிய நடையில் புகட்டுகின்றன.
5. முனாஜாத்துப் பாடல்களுக்கு எண் வரையறை இல்லை.

(எ.கா) பதுறுத்தீன் புலவரின் முகியித்தீன் முனாஜாத்துப் பாடலில், அப்துல் கனி சாகிபுவின் புகழை பெரிதும் பேசப்படும் பாடல்

**"ஞானமாக் கடலி னோடி நடுநிலை முத்தம் வாரித்**
**தானமா மாரி பெய்து தவநிதி பூத்த பூமான்**
**கானமார் போச னப்துல் கனிமனத் தென்றும் உங்கள்**
**தேனருள் ஊட்டி ஆள்வீர் செய்யிது முகியித் தீனே"**

**இசுலாமியப் புலவர்கள் அறிமுகப்படுத்திய பொதுவான சிற்றிலக்கியங்கள்** :

புதியவை படைத்த இசுலாமியப் புலவர்கள், பழைய மரபைப் பின்பற்றிப் பாடவும் தவறவில்லை. பொதுவான சிற்றிலக்கிய வகைகள் ஒவ்வொன்றிலும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் இயற்றிய சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை முன்னூறுக்கும் மேற்பட்டவை. அதில் குறிப்பாக சிலவற்றை இங்கு காண்போம்.

- ***பிள்ளைத்தமிழ்***

பிள்ளைத் தமிழ் நூற்களில் பெரும்பாலும் காப்புப்பருவத்தில் பல தெய்வங்கள் புகழப்பட்டு, பாட்டுடைத் தலைவர் மீது அருள் புரியுமாறு வேண்டுவது மரபு.

செய்யது முகிய்யித்தீன் கவிராயரின் "முகையதின் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்" என்னும் நூலில் காப்புப் பருவத்தில் அல்லாஹ், நபிகள் நாயகம், உமர், உதுமான், அபூபக்கர், அலி, ஹஸன், ஹுசைன், வலிமார்கள், அஸ்ஹாபிசள் முதலிய பலர் புகழப்பட்டு அவர்களின் அருள், பாடப்படும் குழந்தைக்குக் கிடைக்கும்படி வேண்டப்படுகிறது.

- ***கோவை***

கோவை என்பது ஒரு காதல் இலக்கியம். முஸ்லிம் கோவை நூலாகிய செவத்த மரைக்காயரின் "திரு மக்காக் கோவை"யில் பேரின்பக் காதலே போற்றப்படுகின்றது. அப்துல் மஜீதுப் புலவரின்"ஆசாரக் கோவை" யில் இஸ்லாமியர்கள் பின்பற்றுவதற்குரிய ஒழுக்க நெறிகள் விளக்கப்படுகின்றன.

- ***ஏசல்***

இகழ்ச்சியாய்ப் பழமொழிகள் அடக்கி, இசைப் பாடல்களாய் ஒருவரையொருவர் ஏசிப்பாடுவதாக இது

அமையும். இஸ்லாமியரின் ஏசல், இஸ்லாமியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன.

அகமது லெவ்வை ஆலிம் சாகிபு இயற்றியுள்ள "தாய் மகளேசல்" ஒரு தாய்க்கும், மகளுக்குமிடையே நடந்த வாக்கு வாதத்தைக் குறிப்பிடுகின்றன.

- ***மாலை***

பாக்கள் பூமாலை போல் தொடுக்கப்பட்ட சிற்றிலக்கியமே 'மாலை" எனப்படும். இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களில் "மாலை' நூற்களே அதிகமாக உள்ளன. ஏறத்தாழ150 மாலைகள் பாடப்பட்டுள்ளன.

"முதுமொழி மாலை" போன்ற நூற்கள் நபிகள் நாயகத்தைப் போற்றிப் புகழ்வதையே தமது கொள்கை யாகக் கொண்டுள்ளன.

- ***குறம்***

பிறமத இலக்கியங்களில் குறத்தி குறி சொல்வதாகப் பாடல்கள் அமையும். ஆனால் குறி கூறுவதும் கேட்பதும் இஸ்லாமியத்தில் விலக்கப்பட்டவையாதலால், குறத்தியின் வாயிலாகப் பல நல்லுரைகளைக் கூறுகின்றன.

மீரான்கனி அண்ணாவியாரின் 'குறமாது" என்ற நூலில், குறத்தி ஒருத்தியைக் கற்பனையாகப் படைத்து, அவள் அரபாத மலையிலிருந்து வந்து அண்ணல் நபிகளாரைத் தரிசித்து இஸ்லாமியத்தைத் தழுவியதாகப் பாடுகின்றார்.

- ***பூவடிச் சிந்து***

இஸ்லாமிய நெறி முறையில் காவடி எடுக்கும் வழக்கமில்லையென்பதால், அந்த இலக்கிய வகையினை இஸ்லாமியம் தோன்றப் படைக்க எண்ணிய முஸ்லிம் புலவர்கள் "பூவடிச் சிந்து" பாடினர். பூவடிச்சிந்தில் குறிக்கப்படும் இசைவகை அனைத்தும் காவடிச் சிந்தின் மெட்டிலேயே அமைந்து உள்ளது.

காளை உறசனலிப் புலவர், 'பூவடிச் சந்து' பாடியுள்ளார். இந்நூலில் நபிநாயகத்தின் பேரில் பாடிய பூவடிச்சிந்தும், முகியித்தீன் ஆண்டகை பேரில் பாடிய பூவடிச் சிந்தும் மீரான் சாகிபு அண்டகை பேரில் பாடிய பூவடிச் சிந்தும் இருக்கக் காணலாம்.

**<u>முடிவுரை</u> :**

அரபு, பாரசீக இலக்கிய அமைப்பை சார்ந்து இயற்றிய இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள், தமிழ் மண்ணையும் மரபையும் மறவாத வகையில் உள்ளன. மனிதவாழ்வை மேம்படுத்துவதையே நோக்கமாக கொண்டு பல்வேறு வகையான இலக்கிய நடையில் சுவைப்பட தமிழில் இடம்பெற்றுள்ளது. ஒழுக்கத்தை வலியுறுத்துவதே இஸ்லாமியச் சிற்றிலக்கியங்களின் கொள்கை. இஸ்லாமிய புலவர்கள் தமிழில் இயற்றிய புதுவகை இலக்கிய அமைப்பு தமிழ் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை அளித்துள்ளது.

**துணைநூற்பட்டியல் :**

1. இஸ்லாம் வளர்த்த தமிழ் - டாக்டர் ம. முகம்மது உவைஸ் (1984)
2. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் - மணவை முஸ்தபா (1995)
3. இஸ்லாமியர் தமிழ்த் தொண்டு - மு. சாயபு மரைக்காயர் (1986)
4. தமிழில் இஸ்லாமியப் புதுவகை இலக்கியம் - சாகுல் அமீது, டாக்டர் கம்பம் (2000)
5. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு - ம. முகம்மது உவைஸ், பீ.மு. அஜ்மல் கான் (1986)
6. சமயக் கருத்துகள் - எம். எஸ். பஷீர் (2017)
7. இஸ்லாமியத் தமிழிலக்கியம் - ரமீஸ் (2005)
8. இஸ்லாம் தமிழ் ஒரு வரலாற்றுப் பார்வை - ஹாஸன் (2010)